நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.99/2021

அரசு தரப்புக்காக அ.சா.10 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.தமிழ்மாறன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 18 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.03)

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து தற்காலிக பணி நீக்கத்தில் இருக்கிறேன். இதற்கு முன்பு மங்களம்பேட்டை காவல் நிலையத்தில் 10.11.2014 ஆம் தேதி காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மங்களம்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.255/2011 சட்டபிரிவு 174(3) குவிமுச–வின் படி முதல் தகவல் அறிக்கையை சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.பொட்டா என்பவர் பதிவு செய்து வைத்திருந்ததை காவல் ஆய்வாளர் திரு.சுப்புராயலு என்பவர் முதல் கட்ட விசாரணையை முடித்து என் பார்வைக்கு வைத்ததை மேல்

விசாரணைக்காக நான் என் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு கோப்பினை பரிசோதனை செய்தேன். வழக்கின் சாட்சிகளை நான் விசாரணை செய்ததை எனக்கு முன்பு விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திரு.சுப்புராயலு என்பவரிடம் சொன்ன விவரங்களையே என்னிடமும் சொன்னதால் நான் சாட்சிகளை தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த திருமதி.பொட்டா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வட்டார தடய அறிவியல் ஆய்வாளர் திருமதி.ரோஸ்மணி என்பவரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் விருத்தாசலம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் இறந்த நபரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அதை நான் பார்வையிட்டேன். (அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ. 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது). வழக்கின் அனைத்து புலன் விசாரணையையும் முடித்து குற்ற தொடர்வு துறை துணைஇயக்குநர் அவர்களிடம் கருத்துரை பெற்று இவ்வழக்கின் எதிரி பாலசுப்ரமணியன் என்பவர் மீது இதச பிரிவுகள் 498(A), 306 –ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் எதிரி பாலசுப்ரமணியன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்டதாக இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில் அது சம்மந்தமான சாட்சிகளை நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அ.சா.9 விசாரித்ததாக சொல்லும் சாட்சிகளை நான்

விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் இயந்திரதனமாக எதிரி மீது தவறான ஒரு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கில் இறந்துபோன நபருக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை இந்த வழக்கில் தவறாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.18)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.